winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## செப்டம்பர் 2020

செப்டம்பர் 22-30

# நடப்பு நிகழ்வுகள்


**1.சிறார்களின் உரிமைகளை மேம்படுத்துதற்கு ஆதரவாக வாதிடுவதற்கு, UNICEF'ஆல் தெரிவு செய்யப்பட்ட நடிகர் யார்?**

அ. அமிதாப் பச்சன்

ஆ. இரம்யா கிருஷ்ணன்

**இ. ஆயுஷ்மான் குர்ரானா ☑**

ஈ. ஐஸ்வர்யா ராய்



❖ "ஒவ்வொரு குழந்தைக்கும்" என்ற பெயரிலான தனது குழந்தைகள் உரிமை பரப்புரைத் திட்டத்துக்காக UNICEF இந்தியா, நடிகர் ஆயுஷ்மான் குர்ரானாவை தெரிவு செய்துள்ளது. குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான UNICEF'இன் குரலாக ஆயுஷ்மான் குர்ரானா இனி விளங்குவார். முன்னதாக, கால்பந்து வீரர் டேவிட் பெக்காம், இதே திட்டத்திற்காக UNICEF'இல் இணைந்தார்.

**2.சமீபத்தில் வெளியிடப்பட்ட பொருளாதார சார்பற்ற நிலை குறியீடு – 2020'இல், இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 55

**ஆ. 105 ☑**

இ. 125

ஈ. 128




❖ பொருளாதார சார்பற்ற நிலை குறியீடு – 2020'இல், இந்தியா 105ஆவது இடத்தில் உள்ளது. 'உலகின் பொருளாதார சார்பற்ற நிலை: 2020 ஆண்டறிக்கை'யை புது தில்லியைச் சார்ந்த மதியுரையகமான குடிமை சமூக மையத்துடன் இணைந்து கனடாவின் பிரேசர் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை இக்குறியீட்டில் முதலிடத்தில் உள்ளன.

**3.தலைமை தகவிணக்க அலுவலர் நியமனம் தொடர்பாக வங்கிகளுக்கு வழிகாட்டுதல்களை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ. நிதி அமைச்சகம் ☑**

ஆ. இந்திய பங்கு & பரிவர்த்தனை வாரியம்

இ. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்

ஈ. இந்திய ரிசர்வ் வங்கி



❖ வங்கிகளில் இணக்க செயல்பாடுகள் மற்றும் தலைமை தகவிணக்க அலுவலரின் பங்கு தொடர்பான வழிகாட்டுதல்களை ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்டுள்ளது. அனைத்து வங்கிகளிலும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இணக்கக்கொள்கை மற்றும் நியமிக்கப்பட்ட ஒரு தலைமை தகவிணக்க அலுவலர்

கட்டாயம் இருக்கவேண்டும் என இவ்வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன. இத்தலைமை தகவிணக்க அலுவலர், வங்கியின் பொது மேலாளர் பதவிக்கு இணையாக மூத்த நிர்வாகியாக இருப்பார்.

**4.இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமைதி விளைவதற்காக, ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA), எந்த நாட்டுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**



அ. இந்தியா

**ஆ. மாலத்தீவு ☑**

இ. இலங்கை

ஈ. ஜப்பான்

❖ மாலத்தீவுக்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இடையே ஓர் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது. "அமெரிக்க பாதுகாப்புத்துறைக்கான கட்டமைப்பு – மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சகத்திற்கு இடையேயான உறவு" இந்தியப் பெருங்கடலில் அமைதி மற்றும் பாதுகாப்பைப்பேணுவதற்கான ஒத்துழைப்பை ஊக்குவிக்க முற்படுகிறது. முன்னதாக, கடந்த 2013ஆம் ஆண்டில், இரு நாடுகளுக்கிடையில் முன்மொழியப்பட்ட, படைகளின் ஒப்பந்தத்தை இந்தியா எதிர்த்தது குறிப்பிடத்தக்கது.

**5.எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ், தரைவிரிப்பு ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம் செயல்படுகிறது?**

அ. MSME அமைச்சகம்

**ஆ. ஜவுளி அமைச்சகம் ☑**

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. வட கிழக்குப் பிராந்திய வளர்ச்சி அமைச்சகம்

❖ இந்தியாவிலிருந்து தரைவிரிப்புகள் மற்றும் பிற தொடர்புடைய பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்–பதற்காக, கடந்த 1982ஆம் ஆண்டில், ஜவுளி அமைச்சகத்தால் தரைவிரிப்பு ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம் (CEPC) நிறுவப்பட்டது. அண்மையில், மெய்நிகராக மூன்று நாட்களுக்கு நடைபெறும் வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்பை இவ்வமைப்பு அறிவித்ததால், அண்மைச் செய்திகளில் இடம்பிடித்தது.

❖ ஆஸ்திரேலியா மற்றும் அதையொட்டிய நாடுகளில், இந்தச் சந்திப்பு தனது கவனத்தைச் செலுத்தும். ஏனெனில், அந்நாடுகளுக்கு கையால் தயாரிக்கப்பட்ட தரைவிரிப்புகளை இந்தியா மிகப்பெரிய அளவில் ஏற்றுமதி செய்து வருகிறது.

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, பக்ஜான் எண்ணெய்க் கிணறு அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. மேகாலயா

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. மணிப்பூர்

ஈ. மிசோரம்



❖ கிழக்கு அஸ்ஸாமின் டின்சுகியா மாவட்டத்தில் அமைந்துள்ள எண்ணெய் இந்திய நிறுவனத்தின் (OIL) பக்ஜான் எண்ணெய்க் கிணறு மூடப்பட்டுள்ளது. உபகரணங்கள் செயலிழந்த காரணத்தால், இந்த எண்ணெய்க் கிணற்றில், பெரும் தீ விபத்து ஏற்பட்டது. கட்டுப்பாடற்ற எரிவாயு பரவல் காரணமாக அதிக வேகத்தில் அத்தீ பரவியது. எண்ணெய் இந்திய நிறுவனமும் அயல்நாட்டு வல்லுநர்களும் இணைந்து கிட்டத்தட்ட 110 நாட்களுக்குப் பிறகு அத்தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.


**7.வெனிஸ் திரைப்பட விழா – 2020'இல், "சிறந்த திரைக்கதை" விருதை வென்ற இந்திய திரைப்படம் எது?**

அ. ஹெலாரோ

ஆ. சன் ரைஸ்

இ. சீமராஜா

**ஈ. தி டிசைபிள் ☑**




❖ மராத்தி மொழி திரைப்படமான 'The Disciple', வெனிசு திரைப்பட விழா–2020'இல் 'சிறந்த திரைக்கதை' விருதை வென்றுள்ளது. இந்தத் திரைப்படத்தை சைதன்யா தம்ஹானே இயக்கியுள்ளார். பாரம்பரிய ஹிந்துஸ்தானி பாடகரின் தனிப்பட்ட மற்றும் தொழிற்முறை அனுபவங்களை இப்படம் விவரிக்கிறது. மதிப்புமிக்க, 'FIPRESCI' விருதையும் இது பெற்றுள்ளது. சோலி ஜாவோ இயக்கிய 'நோமட்லேண்ட்' திரைப்படம், இந்த விழாவில், "தங்க சிங்கம்" விருதை வென்றது.

**8.இந்திய வாகனங்களில் உமிழ்வு & பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளை அறிவித்துள்ள அமைச்சகம் எது?**

அ. வீட்டுவசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

ஆ. நிதி அமைச்சகம்

**இ. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

ஈ. உள்துறை அமைச்சகம்

❖ இந்திய வாகனங்களில் உமிழ்வு & பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளை மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்திய வாகனங்களுக்கான பூட்டுதல் இல்லா நிறுத்த அமைப்பு (ABS), வளிப்பைகள், பின்புற வாகன நிறுத்த உதவி அமைப்பு மற்றும் மோதல் தரநிலைகளுக்கான வரைவு அறிவிப்புகளையும் அவ்வமைச்சகம் வெளியிட்டுள்ளது.

❖ இத்தகைய விதிமுறைகளில் வளர்ந்த நாடுகளுக்கிணையாக இந்திய வாகனத் தொழிற்துறையைக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் உள்ளன என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

**9.அண்மையில் எந்த மாநிலத்தில் அமைந்துள்ள மூன்று பெட்ரோலிய திட்டங்களை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்?**



அ. உத்தர பிரதேசம் ஆ. மத்திய பிரதேசம்

**இ. பீகார் ☑** ஈ. அஸ்ஸாம்

- ❖ பிரதமர் மோடி, பீகார் மாநிலத்தில், பெட்ரோலியத்துறை தொடர்பான மூன்று முக்கியத் திட்டங்களை காணொலிக்காட்சிமூலம் நாட்டுக்கு அர்ப்பணித்தார். துர்காபூர்–பங்கா பிரிவில், பாரதிப் –ஹால்தியா–துர்காபூர் பைப்லைன் விரிவாக்கத் திட்டம் மற்றும் 2 LPG நிரப்பும் நிலையங்கள் இந்தத் திட்டங்களுள் அடங்கும். மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திய எண்ணெய் நிறுவனமும் (IOC) ஹிந்துஸ்தான் நிறுவனமும் (HPCL) இவற்றை நிர்மாணித்துள்ளன.

**10.சமீபத்தில் நடந்த ASEAN–இந்தியா அமைச்சர்கள் கூட்டத்திற்கு இணைந்து தலைமைதாங்கியவர் யார்?**

அ. உள்துறை அமைச்சர்

**ஆ. வெளியுறவு அமைச்சர் ☑**

இ. பிரதமர்

ஈ. வெளியுறவு செயலாளர்



- ❖ மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு ASEAN – இந்தியா அமைச்சர்கள் கூட்டத்திற்கும் இணைந்து தலைமைதாங்கினார். இக்கூட்டம் ஒரு மெய்நிகர் முறைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் 10 ASEAN உறுப்பு நாடுகளின் அமைச்சர்களும் இந்தியாவின் வெளியுறவு அமைச்சரும் பங்கேற்றனர். இக்கூட்டத்தின்போது, புதிய ASENA – இந்தியா செயல் திட்டம் (2021–2025) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ❖ திருச்சி சரக காவல்துறை மற்றும் இன்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் இணைந்து திருச்சி சரகத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பான வன்முறையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்கில் "கேடயம்" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளன. இத்திட்டமானது திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் & புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- ❖ ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உதவியுடன், உயர்தர மேம்பாட்டு மையம் நிறுவிட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துக்கும், இராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ❖ தமிழ்நாட்டில், ஐம்பதாயிரம் வேலையற்ற நபர்களுக்கு, இணையவழியில், இலவசமாக கல்வி மற்றும் பயிற்சியளிப்பதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி முன்னிலையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்திற்கும், கோர்ஸெரா நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தமாகியுள்ளது.
- ❖ தில்லியில், 2019 ஜூலையில், 55ஆவது அகில இந்திய திறன் போட்டி நடந்தது. இதில், கைவினைஞர் பயிற்சியில், தமிழ்நாடு சிறந்த மாநிலமாக தேர்வுசெய்யப்பட்டது. மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் சார்பில், பாராட்டுச்சான்றிதழ் மற்றும் சுழற்கேடயம் வழங்கப்பட்டது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.திரிபுரா மாநிலத்தின் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) எங்கு அமைக்கப்படுகிறது?**

அ. அகர்தலா

**ஆ. சப்ரூம் ☑**

இ. தர்மாநகர்

ஈ. கைலாஷகர்



❖ திரிபுரா மாநிலத்தின் சப்ரூமில் ஒரு சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) கட்டுவதற்காக, அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது. இது, அம்மாநிலத்தின் முதல் SEZ ஆகும். ₹635 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் இந்த SEZ, இரப்பர், மூங்கில், ஜவுளி மற்றும் உணவுப் பதப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும். திரிபுராவின் தலைநகர் அகர்தலாவிலிருந்து 130 கிமீ தொலைவில் சப்ரூம் அமைந்துள்ளது.

**2.சாலி புயலால் பாதிக்கப்பட்டு, அதன் மாகாணங்களில் அவசரநிலையை அறிவித்த நாடு எது?**

**அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ. ஆஸ்திரேலியா

இ. ஜப்பான்

ஈ. பிலிப்பைன்ஸ்



❖ வெப்பமண்டல புயல் சாலி காரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) கடலோர மாகாணமான லூசியானாவின் ஆளுநர், அம்மாகாணத்தில் அவசரநிலையை அறிவித்துள்ளார். இந்த வெப்பமண்டல புயல் ஒரு சூறாவளியாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் லூசியானா மாகாணத்தின் நிலப்பரப்பிற்கு நகரும்போது, இது, மீண்டும் வெப்பமண்டல புயலாக பலவீனமடையும்.

**3. 1962'க்குப் பிறகு முதன்முறையாக ஆசியாவின் பொருளாதாரம் சரியும் என மதிப்பிட்டுள்ள நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

இ. BRICS வங்கி

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ADB ASIAN DEVELOPMENT BANK

❖ ஆசிய வளர்ச்சி வங்கியின் கூற்றுப்படி, 1962'க்குப் பிறகு முதன்முறையாக ஆசியாவின் பொருளாதாரம் சரியும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1% அதிகரிக்கும் என இவ்வங்கி முன்பு கணித்திருந்தது. தற்போது, 2020ஆம் ஆண்டில் ஆசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 0.7% குறைந்து, 2021ஆம் ஆண்டில் 7.7 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் GDP, நடப்பாண்டு 9%ஆக குறையும் என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

**4. 'நமாமி கங்கை' திட்டம் மற்றும் 'அம்ருத்' திட்டத்தின்கீழ், எந்த மாநிலத்தில், பல்வேறு திட்டங்களை பிரதம அமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்?**

அ. உத்தர பிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. குஜராத்

ஈ. மத்திய பிரதேசம்

❖ 'கங்கையாற்றை தூய்மைப்படுத்தும் திட்டம்' & 'அம்ருத்' திட்டங்களின்கீழ் பீகாரில் பல திட்டங்களை பிரதமர் தொடங்கிவைத்தார். பேயூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பாட்னா, சிவன், மற்றும் சாப்ரா நகரங்களில் புதுப்பிப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்துக்காகன அடல் திட்டம் (அம்ருத்) என 4 திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டன. இதுதவிர, முங்கர், ஜமல்பூர் ஆகிய இடங்களில் குடிநீர் வழங்கல் திட்டங்கள், முசாபர்பூரில் 'கங்கையாற்றை தூய்மைப்படுத்தும் திட்ட'த்தின்கீழ் ஆற்றுப்படுகை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டன.

**5.அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட புதிய வங்கி ஒழுங்குமுறை (திருத்த) மசோதா, எந்த வகை நிறுவனங்களை மறுசீரமைக்க, இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கிறது?**

அ. அயல்நாட்டு வங்கிகள்

**ஆ. கூட்டுறவு வங்கிகள் ☑**

இ. நிதி நிறுவனங்கள்

ஈ. சீட்டு நிதியங்கள்

❖ இந்திய அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட புதிய வங்கி ஒழுங்குமுறை (திருத்த) மசோதா, கூட்டுறவு வங்கிகளை மறுசீரமைக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு (RBI) அதிகாரம் அளிக்கிறது. இந்த மசோதாவை நாடாளுமன்றத்தின் பருவகால அமர்வின் முதல் நாளில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். அவசரச்சட்ட வடிவில் முன்பு தாக்கல் செய்யப்பட்ட இம்மசோதா, பின்னர் திரும்பப் பெறப்பட்டது. இத்திருத்தத்தின்கீழ், ரிசர்வ் வங்கியால் நலிவடைந்த கூட்டுறவு வங்கிகளை மறுசீரமைக்க முடியும்.

**6.யாரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், செப்டம்பர்.15 அன்று, இந்தியா, பொறியாளர் நாளைக் கொண்டாடுகிறது?**

அ. சர் C V இராமன்

ஆ. ஹோமி J பாபா

**இ. M விஸ்வேஷ்வரையா ☑**



ஈ. அப்துல் கலாம்

❖ பொறியாளர் M விஸ்வேஷ்வரையாவின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இந்தியா முழுவதும் செப்.15 அன்று தேசிய பொறியாளர்கள் நாள் கொண்டாடப்படுகிறது. மோக்ஷகுண்டம் விஸ்வேஷ்வரயா, 1861 செப்.15 அன்று கர்நாடகாவில் பிறந்தார். மைசூரில் தலைமைப்பொறியாளராக பணியாற்றிய அவர்,

ஹைதராபாத், மைசூர், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசாவில் பல தொழில்நுட்ப திட்டங்களுக்கு பங்களிப்பு செய்துள்ளார். இதில், தக்கான கால்வாய்களில் கண்டமுறையிலான நீர்ப்பாசனத் திட்டமும் அடங்கும்.

**7.மஞ்சள்கடலில் ஒரு கப்பலிலிருந்து, 9 செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக புவிசுற்றுப்பாதைக்கு ஏவிய நாடு எது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ. சீனா ☑**

இ. இஸ்ரேல்

ஈ. வட கொரியா



❖ மஞ்சள்கடலில் உள்ள ஒரு கப்பலிலிருந்து சீனா ஒரு திண்ம முற்செலுத்தி ஏவூர்திப் பொறியை வெற்றி–கரமாக ஏவியது. இந்த ஏவூர்தியில், 9 செயற்கைகோள்கள் விண்ணுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இது சீனத்தின் 2ஆம் கடல்சார் ஏவுதிட்டமாகும். லாங் மார்ச் 11 குடும்பத்தின் பத்தாவது ஏவுகணையான லாங் மார்ச் 11–HY2, ஜிலின்–1 காபென் 03–1 குழுமத்திற்கு சொந்தமான ஒன்பது தொலையுணர் திறன் கொண்ட செயற்கைக்கோள்களை ஏற்றிச்சென்றது.

**8. CAPEX திட்டத்தின்கீழ், "கொல்லைப்புற தோட்டம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேச அரசு எது?**

அ. புதுச்சேரி

ஆ. சிக்கிம்

**இ. ஜம்மு & காஷ்மீர் ☑**

ஈ. ஆந்திர பிரதேசம்



❖ ஜம்மு–காஷ்மீரின் தோட்டக்கலைத்துறையானது CAPEX திட்டத்தின்கீழ், "கொல்லைப்புற தோட்டம்" என்ற முதன்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இயற்கையான முறையில் பழ உற்பத்தியை மேற்கொள்ள, மக்களை ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், 90% மானியத்தில் 3 பழ தாவரங்கள், உழவர்களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம், தற்சார்பு வாழ்வியலை ஊக்குவிப்பதோடு சுற்றுச்சூழலையும் பேணிப்பாதுகாக்கிறது.

**9.அண்மையில், பெண்களின் நிலை குறித்த ஆணையத்தின் உறுப்பினராக தெரிவான நாடு எது?**

**அ. இந்தியா ☑**

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. ஆஸ்திரேலியா

UN Commission on the Status of Women

❖ பெண்களின் நிலைகுறித்த ஐநா ஆணையத்தின் உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 54 உறுப்பினர்களைக்கொண்ட இந்த ஆணையம் (CSW) ஐநா பொருளாதார & சமூக கவுன்சிலின் (ECOSOC) ஒரு வினைபடு அமைப்பாகும்.

❖ இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் போட்டியிட்ட, ஆசிய–பசிபிக் நாடுகளுக்கான ஈரிடங்களுக்கு தேர்தல் நடந்தது. CSW'இல் இடம்பெறுவதற்கான தேர்தலில் இந்தியா வெற்றிபெற்றது.

**10.இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. நலவாழ்வு அமைச்சகம்

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**இ. ஆயுஷ் அமைச்சகம் ☑**

ஈ. வேளாண் அமைச்சகம்

❖ மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இரு முக்கிய மசோதாக்களை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையம் மசோதா – 2020 மற்றும் ஹோமியோபதிக்கான தேசிய ஆணையம் மசோதா – 2020 ஆகியவை மக்களவையால் செப்.14 அன்று நிறைவேற்றப்பட்டது.

❖ ஏற்கனவேயுள்ள இந்திய மருத்துவ மத்தியக் குழு சட்டம், 1970 மற்றும் ஹோமியோபதி மருத்துவ மத்திய குழு சட்டம், 1973 ஆகியவற்றை இவ்விரு புதிய மசோதாக்கள் மாற்றியமைக்க விழைகின்றன. இவ்விரு மசோதக்களுக்கும் மாநிலங்களவை 2020 மார்ச் 18 அன்று ஒப்புதல் அளித்தது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. அதன் 35 இலட்சம் MSME'களுக்கு சந்தை ஆதரவை வழங்குவதற்காக SIDBI உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. உத்தர பிரதேசம்

❖ குஜராத் மாநில அரசு சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியுடனான (SIDBI) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், அம்மாநிலத்தின் 35 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) திறன் கட்டமைப்பு மற்றும் சந்தை ஆதரவை வழங்குவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னதாக, MSME சூழலியலை உருவாக்குவதற்காக இராஜஸ்தான் மாநில அரசு SIDBI உடன் கூட்டிணைந்தது குறிப்பிடத்தக்கது.

**2.மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதா, DGCA, BCAS மற்றும் AAIB போன்ற விமானப் போக்குவரத்து சார்ந்த முகமைகளை சட்டப்பூர்வ அமைப்புகளாக மாற்ற முற்படுகிறது?**

**அ. வானூர்தி (திருத்தம்) மசோதா, 2020 ☑**



ஆ. வான் போக்குவரத்துத் துறை (திருத்த) மசோதா, 2020

இ. உள்நாட்டு வான் போக்குவரத்து (திருத்த) மசோதா, 2020

ஈ. வான் போக்குவரத்து (திருத்த) மசோதா, 2020

❖ உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தாக்கல்செய்த வானூர்தி (திருத்த) மசோதா 2020'ஐ, மாநிலங்களவை அண்மையில் நிறைவேற்றியது. நடப்பாண்டு மார்ச் மாதத்தில், மக்களவை, இம்மசோதாவுக்கு அனுமதியளித்தது. உள்நாட்டு வான்போக்குவரத்து இயக்குநரகம் (DGCA), விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு (BCAS), வானூர்தி விபத்து விசாரணை அமைப்பு (AAIB) போன்ற வான் போக்குவரத்து சார்ந்த நிறுவனங்களை சட்டரீதியான அமைப்புகளாக மாற்ற இது முற்படுகிறது. வீதிமீறல்களுக்கு கடுமையான தண்டனை வழங்கவும் இது முன்மொழிகிறது.

**3.நடப்பாண்டு (2020) வரும், 'ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான பன்னாட்டு நாளுக்கான (உலக ஓசோன் நாள்)' கருப்பொருள் என்ன?**

**அ. Ozone for Life ☑**



ஆ. Ozone and COVID-19

இ. Ozone Defending Humans

ஈ. The Hole

- உலக ஓசோன் நாள் அல்லது 'ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான பன்னாட்டு நாள்', செப்.16 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. ஓசோன் படலத்தைப்பாதுகாப்பதற்கான வியன்னா தீர்மானம் 1985 மார்ச்.22 அன்று 28 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

- 'வாழ்க்கைக்கான ஓசோன்' என்பது நடப்பாண்டு (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். நடப்பாண்டு (2020), வியன்னா தீர்மானத்தின் முப்பத்தைந்தாம் ஆண்டு நிறைவையும், உலகளாவிய ஓசோன் படல பாதுகாப்பின் 35 ஆண்டுகளையும் குறிக்கிறது.

**4.எந்த நாட்டோடு இணைந்து, பாதுகாப்பு தொழில்நுட்பம் & வர்த்தக முன்னெடுப்பு கூட்டத்தை, இந்தியா நடத்தியது?**

அ. பிரான்ஸ்

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்



- இந்திய–அமெரிக்க இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒருபகுதியாக இந்தியாவுக்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் (USA) இடையிலான பத்தாவது பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முன்னெடுப்பு குழுமக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகின்ற இந்த குழுக்கூட்டங்கள், இந்தியா மற்றும் அமெரிக்காவால் மாறி மாறி நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு நடந்த மெய்நிகரான சந்திப்பின்போது, பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்பு நல்குதல் தொடர்புடைய அறிக்கையொன்றும் கையெழுத்தானது.

**5.உயிரி மருத்துவத்தில் நவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஒரு புதிய நிறுவனத்தை (BARDA) அமைப்பதாக அறிவித்துள்ள பன்னாட்டுச் சங்கம் எது?**

அ. ASEAN

ஆ. காமன்வெல்த்

**இ. ஐரோப்பிய ஒன்றியம் ☑**

ஈ. G20



- ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், ஐரோப்பிய ஒன்றியத்தில் அவரது முதலாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் உரையை நிகழ்த்தினார். அவ்வுரையின்போது, அவர் ஒரு வலுவான ஐரோப்பிய நலவாழ்வுச் சங்கத்தை உருவாக்குதற்கு, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களை வலியுறுத்தினார். உயிரி மருத்துவத்தில் நவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேற்கொள்வதற்கான ஒரு புதிய நிறுவனத்தை (BARDA) உருவாக்கவுள்ளதாகவும் அவர் அறிவித்தார். அடுத்த ஆண்டு உலக நலவாழ்வு உச்சிமாநாட்டைக் கூட்டவும் அவர் முன்மொழிந்தார்.

**6.முதலாம் 'AICTE–விஸ்வேஷ்வரையா சிறந்த ஆசிரியர்' விருதுகளை வழங்கியவர் யார்?**

அ. பிரதமர்



ஆ. குடியரசுத்தலைவர்

இ. குடியரசுத்துணைத்தலைவர்

**ஈ. மத்திய கல்வி அமைச்சர் ☑**

- அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (AICTE) முதன்முறையாக விஸ்வேஷ்வரையா என்ற பெயரில் சிறந்த ஆசிரியர்களுக்கான விருதை உருவாக்கியுள்ளது. இந்த விருதைப் பெறுவதற்கு, நாடு முழுவதும் AICTE அங்கீகாரம்பெற்ற தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களிலிருந்து 12 பேராசிரியர்களை AICTE தேர்வுசெய்தது. பொறியாளர் நாளை முன்னிட்டு, இவர்களுக்கு சிறந்த ஆசிரியர் விருதுகளை மத்திய அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் காணொலிக்காட்சிமூலம் வழங்கினார்.

- சிறப்பான ஆசிரியர்களை அடையாளங்காணவும், உயர்தொழில்நுட்ப கல்வித்துறையில் அவர்களின் சிறந்த நடைமுறையை அங்கீகரிக்கவும் இந்த விருது உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சோனா தொழில்நுட்ப கல்லூரி பேராசிரியயை Dr. R மாலதி, ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி பேராசிரியர் Dr. ஜேனட் ஜெயராஜ், அரசன் கணேசன் பல் தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் Dr நந்தகுமார் மாடா ஆகியோர் உட்பட 12 பேராசிரியர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

**7.MP'களின் ஊதியத்தை எத்தனை சதவீதத்துக்கு குறைக்க முற்படும், 'நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள் மற்றும் ஓய்வூதியம்' மசோதாவை மக்களவை நிறைவேற்றியுள்ளது?**

அ. 10%

ஆ. 20%

இ. 25%

**ஈ. 30% ☑**

- நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள் மற்றும் ஓய்வூதியம் (திருத்த) மசோதா, 2020'ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதா COVID–19 தொற்றால் எழுந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, ஓராண்டு காலத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை 30% குறைக்கும். இந்த ஆண்டு தொடக்கத்தில், இது தொடர்பாக, அரசாங்கம் ஒரு அவசர ஆணையை பிறப்பித்திருந்தது.

**8.செயற்கை சுவாச வழங்கிகளை தயாரிக்கவுள்ள KELTRON, எம்மாநிலத்திற்கு சொந்தமான மின்னணு மேம்பாட்டுக் கழகமாகும்?**

அ. கர்நாடகா

**ஆ. கேரளா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிசா

❖ கேரள மாநில அரசுக்கு சொந்தமான கேரள மாநில மின்னணு மேம்பாட்டுக்கழகம் (KELTRON), வணிக ரீதியாக கிடைக்கக்கூடிய செயற்கை சுவாச வழங்கிகளை (ventilators) தயாரிக்கவுள்ளது. செயற்கை சுவாச வழங்கிகள் உற்பத்தியில் தொழில்நுட்ப நிபுணத்துவம் பெறுவதற்காக, பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின்கீழ் உள்ள உயிரி மருத்துவ தொழில்நுட்ப சங்கத்துடனான ஓர் ஒப்பந்தத்தில் KELTRON கையெழுத்திட்டுள்ளது.

**9.கோசி இரயில் மகா சேது (பிரம்மாண்ட பாலம்) அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. பீகார் ☑**

ஈ. அஸ்ஸாம்



❖ பீகார் மாநிலத்தில் அமைந்துள்ள கோசி இரயில் மகா சேதுவை (பிரம்மாண்ட பாலம்) இந்தியப் பிரதமர் மோடி திறந்துவைத்தார். கடந்த 2003–04'ஆம் ஆண்டில், இந்திய அரசு, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியது. 1.9 கிமீ நீளமுள்ள இப்பாலம் ₹516 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இப்பாலம், இந்திய – நேபாள எல்லையில், உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

**10. G20 உறுப்பு நாடுகளைச் சார்ந்த சுற்றுச்சூழல் அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டமானது எந்த நாட்டின் தலைமையின்கீழ் நடைபெற்றது?**

**அ. சௌதி அரேபியா ☑**

ஆ. ஐக்கிய அமரிக்க நாடுகள்

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

G20
SAUDI ARABIA 2020

❖ G20 உறுப்பு நாடுகளைச் சார்ந்த சுற்றுச்சூழல் அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டமானது சௌதி அரேபியா தலைமையின்கீழ் மெய்நிகர் முறையில் நடைபெற்றது. இந்தியாவின் சார்பாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் பங்கேற்றார். இந்தக் கூட்டத்தில் ஊழல் எதிர்ப்பு, காலநிலை, விவசாயம், எண்ணிமப் பொருளாதாரம், கல்விபோன்ற பல்வேறு சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகள்குறித்து விவாதிக்கப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.நிலுவைத்தொகை செலுத்தப்படாத காரணத்தால் சூடானிலிருந்து வெளியேறிய இந்திய பொதுத்துறை நிறுவனம் எது?**

அ. ONGC ☑

ஆ. SAIL

இ. NTPC

ஈ. NHPC

❖ எண்ணெய் வயல்களிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்க்கு பணம் கொடுக்க மறுத்த காரணத்தால், சூடானிலிருந்து இந்திய பொதுத்துறை நிறுவனமான எண்ணெய் & இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) வெளியேறியுள்ளது. இந்திய அரசுக்கு சொந்தமான எண்ணெய் நிறுவனமான ONGC'இன் அயல்நாட்டு முதலீட்டுக் குழுமமான விதேஷ் (OVL) மற்றும் அதன் சீன பங்குதாரரான CNPC மற்றும் மலேசியாவின் பெட்ரோனாஸ் ஆகியவையும் எண்ணெய் வயல்களிலிருந்து விலகியுள்ளன. 2011ஆம் ஆண்டு முதல் வாங்கிய எண்ணெய்க்கு, $430.69 மில்லியனை சூடான் செலுத்தாமல் உள்ளது.

**2.பிரதமர் மோடியின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு வாரத்தின் பெயர் என்ன?**

அ. சேவா சப்தா ☑

ஆ. பாரத் சப்தா

இ. தற்சார்பு சப்தா

ஈ. தூய்மை சப்தா



❖ பிரதமர் மோடியின் பிறந்தநாளை சேவை வாரமாகக் கொண்டாட பா. ஜ. க முடிவு செய்துள்ளது. பிரதமர் மோடியின் பிறந்தநாள் செப்.17 அன்று கொண்டாடப்பட்டது. செப்டம்பர்.14–20 வரையிலான ஒரு வார காலத்திற்கு, 'சேவா சப்தா'வைக் கொண்டாடவுள்ளதாக பா. ஜ. க தலைமை தீர்மானித்துள்ளது. இந்த ஒருவார காலத்தில், மோடி தலைமையிலான அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை மக்களிடம் எடுத்துரைக்கும் விதமாக நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் பா. ஜ. க ஏற்பாடு செய்துள்ளது.

**3.2025ஆம் ஆண்டுக்குள், பிரதமர் பாரதிய ஜனசாதி கேந்திரங்களின் எண்ணிக்கையை எத்தனையாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?**

அ. 4500

ஆ. 6500

இ. 8500

ஈ. 10500 ☑

❖ எதிர்வரும் 2024 மார்ச் இறுதிக்குள், பிரதமரின் மக்கள் நல மருந்தகங்களின் எண்ணிக்கையை 10,500ஆக அதிகரிக்க நடுவணரசு இலக்கு நிர்ணயித்திருப்பதாக மத்திய இரசாயனங்கள் & உரங்கள்

துறை தெரிவித்துள்ளது. பொதுமக்களுக்கு தரமான மருந்துகளை குறைந்த விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மக்கள் நல மருந்தகங்கள் தொடங்கப்பட்டன. 2020 செப்.15 நிலவரப்படி, நமது நாட்டில் உள்ள மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கை 6,603ஆக அதிகரித்துள்ளது.

**4. AICTE'இன், நடப்பாண்டுக்கான (2020) உத்கிருஷ்ட சன்ஸ்தான் விஸ்வகர்மா விருதை வென்றுள்ள நிறுவனம் எது?**

**அ. பொறியியல் கல்லூரி, புனே ☑**

ஆ. தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி

இ. பொறியியல் கல்லூரி, சென்னை

ஈ. S R பொறியியல் கல்லூரி

❖ அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவின்கீழ் (AICTE) வரும் நிறுவனங்களுக்கு 14 பிரிவுகளில் 2ஆம் உத்கிருஷ்ட சன்ஸ்தான் விஸ்வகர்மா விருதை மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' மெய்நிகர் முறையில் வழங்கினார். புனே பொறியியல் கல்லூரி ஒட்டுமொத்த பிரிவில் முதல் பரிசை வென்றது. 2019ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த விருது, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் செயல்திறனை அதிகரித்து சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்காற்ற செய்வதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு, விருதுக்கான கருப்பொருளாக, "கொரோனாவை எதிர்த்து இந்தியா போராடுகிறது" என்பது இருந்தது.

**5.ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் குடும்பங்களுக்கு, பசுக்களை வழங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

அ. குஜராத்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. பீகார்



❖ மாநிலத்தில் வசித்து வரும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் குடும்பங்களுக்கு பசுக்களை வழங்குவதாக உத்தர பிரதேச மாநில அரசு சமீபத்தில் அறிவித்தது. செப்டம்பர் மாதத்தில் நாடு முழுவதும் தொடங்கப்பட்ட 'ஊட்டச்சத்து மாதம்' திட்டத்தின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது. உ பி மாநில அரசானது, இதனை, 'முதலமைச்சரின் ஆதரவற்ற பசுக்கள் பங்கேற்பு திட்டத்தின்'கீழ் மேற்கொள்ளும்.

**6.டொராண்டோ பன்னாட்டுத் திரைப்பட விழாவில், ஊடகத்தினூடாக தாக்கத்தை ஏற்படுத்துவோருக்கு வழங்கப்படும், 'ஜெப் ஸ்கோல்' விருதை வென்ற இந்திய–அமெரிக்க திரைப்பட இயக்குநர் யார்?**

**அ. மீரா நாயர் ☑**

ஆ. ஜோயா அக்தர்

இ. அஞ்சலி மேனன்

ஈ. சுதா கொங்கரா



❖ இந்திய–அமெரிக்க திரைப்பட இயக்குநர் மீரா நாயர், அண்மையில், டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில், ஊடகத்தினூடாக தாக்கத்தை ஏற்படுத்துவோர்க்கு வழங்கப்படும், 'ஜெப் ஸ்கோல்' விருதைப் பெற்றார். சர் அந்தோனி ஹாப்கின்ஸ், ஆஸ்கர் விருது பெற்ற நடிகை கேட் வின்ஸ்லெட் என இவ்விருது பெற்ற அறுவருள் ஒருவராக மீரா இருந்தார். 'A Suitable Boy' என்ற தொலைக்காட்சி தொடருக்காக மீராவுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**7. 'மட்பாண்ட செயல்முறை' மற்றும் 'தேனீ வளர்ப்பு செயல்முறை' உள்ளிட்ட திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களை அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**



அ. வேளாண்மை & உழவர்நலத்துறை அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

ஈ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

❖ 'மட்பாண்ட செயல்முறை' மற்றும் 'தேனீ வளர்ப்பு செயல்முறை' ஆகிய இரண்டு திட்டங்களுக்கான வழிகாட்டுதல்களை மத்திய MSME அமைச்சகம் வெளியிட்டுள்ளது. ஊதுவத்தி உற்பத்தியில் ஈடுபட்டு உள்ளோருக்கான ஆதரவை விரிவுபடுத்தி இரட்டிப்பாக்குவதாக மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம் சில நாட்களுக்கு முன் அறிவித்தது. மத்திய MSME அமைச்சகத்தின் SFURTI திட்டத்தின்கீழ், மட்பாண்டங்கள் தயாரிப்பதற்கான அமைப்பை நிறுவுவதற்கும், தேனீ வளர்ப்புக்கான அமைப்பை உருவாக்குவதற்கும் தலா ₹50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**8.அண்மையில் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட SWAMIH நிதியம் சார்ந்த துறை எது?**



அ. சாலைப் போக்குவரத்து

ஆ. விண்வெளித் தொழில்நுட்பம்

**இ. வீட்டுவசதி ☑**

ஈ. வேளாண்மை

❖ இந்திய அரசாங்கம் ஒரு புதிய "குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டங்களுக்கான சிறப்பு அனுமதி சாளரம்" திட்டத்தை (SWAMIH நிதியம்) உருவாக்கியுள்ளது. இது நிகர மதிப்புள்ள நேர்மறையான வீட்டுவசதித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இத்திட்டங்களில், NPA'ஆக அறிவிக்கப்பட்டவையும், IBC'இன்கீழ் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் முன் நிலுவையில் உள்ளவையும் அடங்கும்.

**9.ஹில்சா மீன்களை குறிப்பிட்ட அளவுக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடிவு செய்துள்ள நாடு எது?**



அ. இலங்கை

ஆ. மியான்மர்

**இ. வங்கதேசம் ☑**

ஈ. பாகிஸ்தான்

- ஹில்சா மீன்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய வங்கதேச அரசு முடிவு செய்துள்ளது. வரும் துர்கா பூசையை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் வர்த்தக அமைச்சகம், ஒன்பது ஏற்றுமதியாளர்களுக்கு, 1500 டன் ஹில்சாவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்துள்ளது. 2012'இல் ஹில்சா ஏற்றுமதிக்கு வங்கதேசம் தடைவிதித்திருந்தது.

**10. உலக வங்கியின் நடப்பாண்டுக்கான (2020) மனிதவளக் குறியீட்டில், இந்தியா அடைந்த தரநிலை என்ன?**

அ. 76

ஆ. 96

இ. 106

ஈ. 116 ☑




- ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படும் உலக வங்கியின் மனிதவளக் குறியீட்டின் அண்மைய பதிப்பில், இந்தியா 116ஆம் இடத்தில் உள்ளது. மனிதவளத்தின் முக்கிய கூறுகளின் அடிப்படையில், இக்குறியீடு, நாடுகளை வரிசைப்படுத்துகிறது. இந்தியாவின் மதிப்பெண், 2018ஆம் ஆண்டில் அது பெற்றிருந்த 0.44 என்ற அளவிலிருந்து தற்போது 0.49ஆக அதிகரித்துள்ளது. நடப்பாண்டு (2020) மார்ச் மாதம் வரை 174 நாடுகளுக்கான நலவாழ்வு மற்றும் கல்விசார் தரவுகளை இந்தக்குறியீடு உள்ளடக்கியுள்ளது. ஒரு பில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு இதுவரை பள்ளிக்கல்வி கிடைக்கப்பெறவில்லை என்ற தகவலையும் இந்தக் குறியீடு வெளிப்படுத்தியுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் (74) இன்று காலமானார். ஆறு தேசிய விருதுகளை அவர் பெற்றுள்ளார். 2001'இல், 'பத்மஸ்ரீ', 2011'இல், 'பத்மபூஷன்' விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன.



└ 1946 – 2020 ┘

# நடப்பு நிகழ்வுகள்


**1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஜிபூட்டி நன்னடத்தைக் கோட்பாடு' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

அ. அறிவுசார் சொத்துரிமைகள்

ஆ. தகவல் தொழில்நுட்பம்

இ. வருமான வரி

**ஈ. கடல்சார் விவகாரங்கள் ☑**




❖ மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் அண்மைய அறிக்கையின்படி, இந்தியா, ஜிபூட்டி நன்னடத்தைக் கோட்பாட்டில் (DCOC) இணைந்துள்ளது. DCOC என்பது கடல்சார் விவகாரங்கள் தொடர்பான ஒரு சங்கமாகும். அது, மேற்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் உள்ள கப்பல்களில் மேற்கொள்ளபடும் திருட்டு/ஆயுதமேந்திய கொள்ளைகளை எதிர்ப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்தியா ஒரு பார்வையாளராக இந்தக்குழுவில் இணைந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி, மொத்தம் 20 நாடுகள், இந்த நன்னடத்தைக் கோட்பாட்டில் கையெழுத்திட்டுள்ளன.

**2. மின்னாற்றலில் இயங்கும் வாகனங்களுக்கான ஒரு புதிய மானியத் திட்டத்தை அறிவித்துள்ள மாநில அல்லது யூனியன் பிரதேச அரசு எது?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. இராஜஸ்தான்



❖ குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி, அண்மையில், மின்னாற்றலில் இயங்கும் வாகனங்களுக்கான ஒரு புதிய மானியத்திட்டத்தை அறிவித்தார். இது, காற்று மாசுபாட்டைத் தடுப்பதற்காக, மின்னாற்றலில் இயங்கும் வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் ஐந்து வளர்ச்சித்திட்டங்களின், "பஞ்சசீல பரிசு" என்று முதலமைச்சர் இதனை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ், மாணவர்களுக்கு மின்–ஈருளிகள் வாங்குவதற்கு ₹12,000 மானியம் கிடைக்கும்.


**3.மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சீன மக்களை பாதித்துள்ள பாக்டீரியா நோய் எது?**

அ. அடைப்பான் நோய் (Anthrax)

**ஆ. கன்று வீச்சு நோய் (Brucellosis) ☑**

இ. கால் மற்றும் வாய் நோய்

ஈ. எலிக்காய்ச்சல்



❖ அண்மையில், 'புரூசெல்லோசிஸ்' என்ற பாக்டீரியா தொற்றுநோய் பரவுவதாக சீனா அறிவித்தது. இது பெரும்பாலும், பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நெருங்கிப்பழகுவதன் காரணமாக ஏற்படுகிறது. இந்த நோய் காய்ச்சல், மூட்டு வலி மற்றும் தலைவலியை ஏற்படுத்துகிறது. ஒருவரிடத்திருந்து ஒருவருக்கு,

புரூசெல்லோசிஸ் நோய் பரவியதற்கான எந்தவொரு ஆதாரமும் இதுவரை இல்லை என சீன சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர். லான்ஷோவில் உள்ள அரசுக்கு சொந்தமான உயிரி–மருந்து ஆலையில் பணிபுரியும் ஊழியர்களிடையே இந்நோய் பரவியதாகக் கூறப்படுகிறது.

**4.பயணிகளிடமிருந்து கூடுதல் "பயனர் கட்டணம்" வசூலிக்க முடிவுசெய்துள்ள அமைப்பு எது?**

அ. இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம்

ஆ. இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையம்

**இ. இந்திய இரயில்வே ☑**

ஈ. உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம்

❖ சில முக்கிய இரயில் நிலையங்களில், ரயில் கட்டணத்துடன் கூடுதலாக "பயனர் கட்டணம்" வசூலிக்க இந்திய இரயில்வே முடிவுசெய்துள்ளது. இதனை இரயில்வே வாரிய தலைமைச் செயல் அதிகாரி V K யாதவ் தெரிவித்துள்ளார். இக்கூடுதல் கட்டணம், இரயில் நிலையங்களை சீரமைக்கவும், முதலீடுகளை ஈர்ப்பதற்காக அவற்றின் உட்கட்டமைப்பை நவீனப்படுத்தவும் பயன்படுத்தப்படும். மொத்த இரயில் நிலையங்களில், கிட்டத்தட்ட 10–15% வரையிலான இரயில் நிலையங்களில் மட்டுமே இந்தக்கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**5. 2020 செப்டம்பர்.24 அன்று நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) கூட்டத்திற்கு தலைமைதாங்கிய நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. நேபாளம் ☑**

இ. இலங்கை

ஈ. வங்கதேசம்

❖ தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) கூட்டம், 2020 செப்.24 அன்று நடந்தது. காணொலிக்காட்சிமூலம் மெய்நிகர் முறையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, நேபாள வெளியுறவு அமைச்சர் பிரதீப் குமார் கியாவாலி தலைமைதாங்கினார். அனைத்து உறுப்புநாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். இந்தியா, பாகிஸ்தான் அமைச்சர்களும் சந்தித்தனர்.


**6.இந்தியாவில், 'மருந்துக்குறிப்பெழுதுதல் நடைமுறை'களை மேம்படுத்துவதற்காக, இலவச ஆன்லைன் பாடத்தை தொடங்கியுள்ள அமைப்பு எது?**

அ. AIIMS

**ஆ. ICMR ☑**

இ. JIPMER

ஈ. ஆயுஷ் அமைச்சகம்



- இந்தியாவின் மருத்துவ பட்டதாரிகளிடையே 'மருந்துக்குறிப்பெழுதுதல் நடைமுறை'களை மேம்படுத்த, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) ஓர் இலவச இணையவழி பாடத்தை தொடங்கியுள்ளது. 'இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கான மருந்துக்குறிப்பெழுதும் திறன்கள்' என்ற பெயரிலான இந்தப் பாடத்தை, சென்னையில் அமைந்துள்ள தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் வழங்கவுள்ளது. இந்திய மருத்துவக் கழகமானது முதுகலை பட்டதாரிகளுக்கு இந்தப்பாடத்தை கட்டாயமாக்கியுள்ளது.

**7.நலவாழ்வுப் பணியாளர்கள் / மருத்துவர்களைத் தாக்கும் நபர்களை, தண்டனைக்கு உள்ளாக்கும் சட்டத்தைக் கொண்டுவரும் எந்த மசோதாவை, மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது?**



அ. தொற்றுநோய்கள் (திருத்தம்) மசோதா, 2020 ☑

ஆ. தேசிய நேச & நலவாழ்வுத் தொழிற்துறையினர் ஆணைய மசோதா, 2020

இ. இந்திய மருத்துவ மையக் கழக (திருத்தம்) மசோதா, 2020

ஈ. நலவாழ்வுச் சேவை பணியாளர்கள் & மருத்துவ நிறுவனங்கள் மசோதா, 2019

- நலவாழ்வுப் பணியாளர்கள் / மருத்துவர்களைத் தாக்கும் நபர்களை, தண்டனைக்கு உள்ளாக்கும் சட்டத்தைக் கொண்டுவரும் தொற்றுநோய்கள் (திருத்த) மசோதா, 2020'ஐ மாநிலங்களவை சமீபத்தில் நிறைவேற்றியது. COVID–19 அல்லது இதேபோன்ற பிறிதொரு சூழ்நிலையை எதிர்த்துப் போராடும் நலவாழ்வுப் பணியாளர்கள் அல்லது மருத்துவர்களைத் தாக்குபவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையை இந்தச் சட்டம் அளிக்கிறது.

**8.நீலக்கொடி பன்னாட்டுச் சூழல் முத்திரைக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் எத்தனை இந்திய கடற்கரைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன?**




அ. உ – இரண்டு

ஆ. ச – நான்கு

இ. சா – ஆறு

ஈ. அ – எட்டு ☑

- "நீலக்கொடி" பன்னாட்டுச் சூழல் முத்திரை பெறுவதற்காக இந்தியத் திருநாட்டின் எட்டுக்கடற்கரைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் 2020 செப்.19 அன்று தெரிவித்தார். கடந்த 1986ஆம் ஆண்டு முதல் சுமார் 100 நாடுகளில் கொண்டாடப்பட்டுவரும், "சர்வதேச கடலோர தூய்மைப்படுத்தும் நாளை' முன்னிட்டு அமைச்சர் இதனைக் கூறினார்.

- சிவராஜ்பூர் (குஜராத்), கோக்லா (டாமன் & டையூ), காசர்கோடு & பதுபித்ரி (கர்நாடகா), கப்பாடு (கேரளா), ருஷிகொண்டா (ஆந்திர பிரதேசம்), தங்கக்கடற்கரை (ஒடிசா) மற்றும் இராதாநகர் கடற்கரை (அந்தமான் & நிக்கோபார்) ஆகிய எட்டுக்கடற்கரைகள் இந்த 'நீலக்கொடி' முத்திரைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**9.பன்னாட்டு சம ஊதிய நாள் (International Equal Pay Day) அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ. செப்டம்பர் 15 ஆ. செப்டம்பர் 16

இ. செப்டம்பர் 17 ஈ. செப்டம்பர் 18 ☑

❖ செப்டம்பர்.18ஆம் தேதியை பன்னாட்டு சம ஊதிய நாளாக ஐக்கிய நாடுகள் அவை கொண்டாடுகிறது. இந்நாள் முதன்முறையாக இவ்வாண்டு (2020) கொண்டாடப்பட்டது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக்கொண்டுவருதற்காக ஐநா அவை இச்சிறப்புநாளை அனுசரிக்கிறது. ஐநா அவையைப் பொறுத்தவரை, உலகின் அனைத்து பகுதிகளிலும் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. பாலின ஊதிய இடைவெளி 23% எனவும் ஐக்கிய நாடுகள் அவை மதிப்பிட்டுள்ளது.

**10. NGDRS என்ற புதிய நில ஆவணப் பதிவு முறையை அறிமுகப்படுத்தியுள்ள மாநில / யூனியன் பிரதேச அரசு எது?**



அ. தமிழ்நாடு

ஆ. புதுச்சேரி

இ. அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஈ. ஜம்மு & காஷ்மீர் ☑

❖ ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேச அரசானது, 'தேசிய பொது ஆவணப் பதிவு முறை'யைத் (NGDRS) தொடங்கியுள்ளது. இந்த அமைப்பு, தற்போதுள்ள கைமுறை பதிவு முறையிலிருந்து இணையவழி பதிவு முறைக்கு நில விற்பனை அல்லது வாங்கும் செயல்முறையை மாற்றுவதைக் குறிக்கிறது. இந்தப் புதிய அமைப்பு வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள நிலப்பதிவு பொறிமுறையை நிறுவுவதன்மூலம் ஜம்மு & காஷ்மீர் யூனியன் பிரதேச அரசின் மின்னாளுகைக்கு பலம் சேர்க்கும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.கீழ்க்காணும் எந்த நாடு தனது "நம்பத்தகாத நிறுவனங்கள் பட்டியலில்" உள்ள நிறுவனங்களுக்கு அபராதம் விதித்துள்ளது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. இத்தாலி



❖ சீனா தனது "நம்பத்தகாத நிறுவனங்கள் பட்டியலில்" உள்ள நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அலுவல்பூர்வ அறிக்கையின்படி, சீனத்தின் இறையாண்மை, தேசிய பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் வணிக நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வர்த்தகம், முதலீடு மற்றும் நுழைவு இசைவுகளுக்கு தடை விதிப்பது உள்ளிட்ட அபராதங்களை சீனா விதிக்கும். சீன வணிகங்களுக்கு பாகுபாடு காட்டும் (அ) தீங்கு விளைவிக்கும் நிறுவனங்களின் பட்டியலும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

**2.உலக அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. செப்டம்பர் 21 ☑**

ஆ. செப்டம்பர் 22

இ. செப்டம்பர் 23

ஈ. செப்டம்பர் 24




❖ அல்சைமர் என்பது ஞாபக மறதிக்கு வழிவகுக்கிற ஒரு நாட்பட்ட நோயாகும். காலப்போக்கில் இதன் நிலை மிக மோசமடைந்து அன்றாட பணிகளைச் செய்வதுகூட கடினமாகிறது. கடந்த 1994ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் செப்.21 அன்று உலக அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்குமுள்ள தேசிய மற்றும் உள்ளூர் அல்சைமர் சங்கங்கள், இந்நோய் குறித்த விழிப்புணர்வு திட்டங்களை அடைய உதவும் வகையில், ஆண்டுதோறும் உலக அல்சைமர் மாதமாக செப்டம்பரை அனுசரிக்கின்றன.

**3.சமீபத்தில் உலகளாவிய கட்டடக்கலை & வடிவமைப்பு விருதை வென்ற 'கிருஷி பவன்' அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

**ஆ. ஒடிசா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. தெலுங்கானா



❖ செப்.18 அன்று, ஒடிச மாநிலம் புவனேசுவரில் அமைந்துள்ள மாநில வேளாண்மை மற்றும் உழவர் அதிகாரமளித்தல் துறைக்காக உருவாக்கப்பட்ட கிருஷி பவன், 'சமூக நலன்' என்ற பிரிவின்கீழ் 10ஆம் ஆண்டு AZ விருதுகள் 2020'இன் விருதினை வென்றது.

❖ இந்த விருதுகள், மெய்நிகராக நடத்தப்பட்ட AZ விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட்டன. 12,077 சமீ பரப்பளவில் அமைந்துள்ள 'கிருஷி பவன்', விருது பெற்ற இருபது வெற்றியாளர்களுள் ஒருவராகவும் இந்தியாவிலிருந்து இவ்விருதைப் பெற்ற ஒரே வெற்றியாளராகவும் உள்ளது.

**4.கீழ்க்காணும் நபர்களுள் 'பனிச்சிறுத்தை' என அழைக்கப்பட்ட மலையேற்ற வீரர் யார்?**

அ. ஜிம்மி சின்

ஆ. நிர்மல் பூர்ஜா

இ. மாளவத் பூர்ணா

**ஈ. ஆங் ரீதா ஷெர்பா ☑**



❖ மிகை ஆக்ஸிஜனின் துணையின்றி 10 முறை எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய, 'பனிச்சிறுத்தை' என்றும் அழைக்கப்படுகிற மலையேற்ற வீரரான ஆங் ரீட்டா ஷெர்பா, செப்டம்பர்.21 அன்று காலமானார்.

**5.ரோதங் சுரங்கப்பாதைக்கு எந்த முன்னாள் பிரதமரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?**

**அ. அடல் பிகாரி வாஜ்பாய் ☑**

ஆ. மன்மோகன் சிங்

இ. ஜவஹர்லால் நேரு

ஈ. இந்திரா காந்தி



❖ இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் பெயர் விளங்குமாறு ரோதங் சுரங்கப்பாதை –க்கு 'அடல் சுரங்கப்பாதை' என பெயர்சூட்டப்பட்டுள்ளது. இது, லே–மணாலி நெடுஞ்சாலையில் இமயம –லையின் கிழக்கில் அமைந்துள்ள பிர் பாஞ்சல் மலைத்தொடரில், ரோதங் கணவாயின் கீழ் கட்டப்பட்டு உள்ள நெடுஞ்சாலை சுரங்கப்பாதையாகும். இது, 10000 அடி உயரத்தில் அமைந்துள்ள உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதையாகும்.

**6.பின்வரும் எந்த நிறுவன(த்தை)ங்களை தரமுயர்த்தி, தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான மசோதாவை மக்களவை அண்மையில் நிறைவேற்றியது?**

அ. குஜராத் தடய அறிவியல் பல்கலைக்கழகம்

ஆ. ஜெயபிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம்

**இ. (அ) மற்றும் (ஆ) இரண்டும் ☑**

ஈ. (அ) அல்லது (ஆ) இரண்டும் இல்லை



❖ குஜராத் மாநிலத்தில் உள்ள தடய அறிவியல் பல்கலைக்கழகத்தை தரமுயர்த்தி தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தும் மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் குஜராத் மாநிலம், காந்தி நகரில் அமைந்துள்ள தடய அறிவியல் பல்கலைக்கழகம் தேசிய பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படுகிறது. இந்த மசோதாமூலம், தில்லியில் உள்ள லோக் நாயக் ஜெயபிரகாஷ் நாராயண் குற்றவியல் & தடய அறிவியல் நிறுவனத்துக்கு தேசிய அந்தஸ்து அளிப்பதற்கும் முன்மொழியப்படுகிறது.

**7.சமீபத்தில், மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களால் வழங்கப்படும், பன்னாட்டளவில் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தின் முதல் பக்கத்தில், 'சாலைப்போக்குவரத்திற்கான பன்னாட்டு மரபு' என முத்திரையிட வேண்டும் என்று மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுக்கு சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. இந்த மரபு நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**

**அ. 1949 ☑**

ஆ. 1959

இ. 1969

ஈ. 1979




❖ மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், பன்னாட்டு ஓட்டுநர் உரிமத்தை வழங்கும்போது, அதன் முதல் பக்கத்தில் "சாலைப்போக்குவரத்திற்கான 1949 செப்.19'இன் பன்னாட்டு மரபு" என முத்திரையைப் பதிக்குமாறு மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இந்திய குடிமக்களுக்கு வழங்கப்படும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமத்தை, இந்த முத்திரை இல்லாத காரணத்தாலேயே பல நாடுகள் ஏற்க மறுப்பதாக அமைச்சகத்திற்கு வந்த புகார்களை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**8.ஜனக் & BSS–793 ஆகிய இரண்டும், கீழ்க்காணும் எந்தத் தாவரத்தின் இருவேறு வகைகளாகும்?**

அ. Bt – பருத்தி

**ஆ. Bt – கத்தரி ☑**

இ. Bt – தக்காளி

ஈ. Bt – நெல்



❖ மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழுவால் அண்மையில் புலச்சோதனைக்கு ஒப்புதல் அளிக்கப்பெற்ற "ஜனக்" மற்றும் "BSS–793" ஆகிய இரண்டும் Bt–கத்தரிக்காய் வகைகளாகும். அவற்றில் பூச்சியைக் கொல்லும் 'Cry1Fa1 (நிகழ்வு 142)' மரபணு உள்ளது; இது, மண்ணில் வசிக்கும் பாக்டீரியமான பாசிலஸ் துரிங்ஜென்சிஸ் (Bt)'இலிருந்து பெறப்பட்டதாகும்.

**9.அண்மையில் வெளியிடப்பட்ட FIFA தரவரிசையில், முதலிடத்தில் உள்ள நாடு எது?**

அ. இந்தியா

ஆ. பிரான்ஸ்

இ. ஜப்பான்

**ஈ. பெல்ஜியம் ☑**



❖ பன்னாட்டு கால்பந்து கூட்டமைப்பான (FIFA) தனது உலகளாவிய FIFA தரவரிசைகளை அண்மையில் வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் பெல்ஜியம் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டது. பெல்ஜியத்தைத் தொடர்ந்து பிரான்ஸ் மற்றும் பிரேசில் உள்ளன. நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே இங்கிலாந்து மற்றும் உருகுவே ஆக்கிரமித்துள்ளன.

- தரவரிசையில், இந்திய கால்பந்து அணி, 108ஆம் இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளது. COVID–19 தொற்றுநோய், பன்னாட்டளவிலான போட்டிகளை நடத்துவதற்கு ஒரு தடையாக இருந்து வருகின்ற காரணத்தால், தரவரிசையில் எந்தவொரு மாற்றமும் இல்லாமல் உள்ளது.

**10.பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான குற்றங்களை எதிர்த்துப் போராடுவதையும், அவர்களுக்காக பாதுகாப்பான மற்றும் வன்முறையற்ற சமூகங்களை உருவாக்குவதையும் நோக்கமாகக்கொண்ட ஒரு தனித்துவமான முன்னெடுப்பான, 'கேடயம் திட்டம்', எந்த மாநிலத்தில் செயல்படுத்தப்படவுள்ளது?**

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளம்

இ. தெலுங்கானா

ஈ. அஸ்ஸாம்

- திருச்சிராப்பள்ளி சரகத்திற்கு உட்பட்ட திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற சம்பவங்களை தடுத்து நிறுத்தவும், இதுதொடர்பாக பெண்கள் & சிறார்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நோக்கம் கொண்டு திருச்சிராப்பள்ளி சரக காவல்துறை, 'கேடயம்' என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது.

- பன்னாட்டு நீதிக் குழுமம் என்றவொரு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது இந்தத் திட்டம்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) திருத்த மசோதா, 2020'ஐ மக்களவை நிறைவேற்றியது. அசல் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**

அ. 2005

ஆ. 2008

**இ. 2010 ☑**

ஈ. 2019




- வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றல்) திருத்த மசோதா, 2020 ஆனது செப்.21 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இது, இந்தியாவில் அயல்நாட்டு பங்களிப்புகளைப் பெறுவதை நிர்வகிக்கும் சட்டத்தில் பல கடுமையான மாற்றங்களை முன்மொழிகிறது.

- இது தனிநபர்கள், சங்கங்கள் & நிறுவனங்களால் அயல்நாட்டு பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதையும் பயன்படுத்தப்படுவதையும் கட்டுப்படுத்தும் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்றுதல்) சட்டம், 2010'ஐ திருத்துகிறது. இத்திருத்தம் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் (அ) வெளிநாட்டு நன்கொடைகளைப் பெறும் ஒரு சங்கத்தின் அனைத்து அலுவலர்களையும் பதிவுசெய்வதற்கான கட்டாய அடையாள ஆவணமாக 'ஆதார்' அட்டையை மாற்றியுள்ளது. FCRA'இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட (அ) முன் அனுமதி பெற்ற ஒரு நிறுவனம் அதன் நியமிக்கப்பட்ட FCRA வங்கிக்கணக்கில் பெறப்பட்ட அயல்நாட்டு பங்களிப்புகளிலிருந்து வேறெந்நிறுவனத்திற்கும் (FCRA'இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட (அ) முன் அனுமதி பெற்றிருந்தாலுங்கூட) துணை மானியம்/களை வழங்க முடியாதவாறு இச்சட்டம் தடைசெய்கிறது.

**2.நடப்பாண்டு (2020), ஐக்கிய நாடுகள் அவையின் எத்தனையாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது?**

அ. 68ஆவது ஆண்டு நிறைவு

ஆ. 70ஆவது ஆண்டு நிறைவு

இ. 73ஆவது ஆண்டு நிறைவு

**ஈ. 75ஆவது ஆண்டு நிறைவு ☑**

- நடப்பாண்டு (2020) ஐநா'இன் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஐநா பொது அவையின் கூட்டம் செப்டம்பர்.21 அன்று மெய்நிகராக நடத்தப்பட்டது. அது, "The Future We Want, the UN We Need: Reaffirming our Collective Commitment to Multilateralism – நாம் விரும்பும் எதிர்காலம், நமக்குத் தேவை –யான ஐநா: பன்முகத்தன்மைக்கான எங்கள் கூட்டணியின் உறுதிப்பாட்டை மறு உறுதிப்படுத்துவது" என்ற தலைப்பில் தீர்மானம் ஒன்றை வெளியிட்டது. 1945 அக்டோபர் 20 அன்று நிறுவப்பட்ட ஐநா'இன் 75ஆவது ஆண்டு நிறைவை, 2020ஆம் ஆண்டு குறிக்கிறது.

**3.அண்மையில் இந்திய நாடாளுமன்றம், COVID-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நலவாழ்வு ஊழியர்கள் மீதான வன்முறைச் சம்பவங்களை பிணை பெறவியலாத குற்றமாக மாற்றுவதற்கு 2020ஆம் ஆண்டு தொற்றுநோய்கள் (திருத்த) மசோதாவை நிறைவேற்றியது. அசல் தொற்றுநோய்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**

அ. 1897 ☑

ஆ. 1898

இ. 1947

ஈ. 1956




❖ தொற்றுநோய்கள் (திருத்த) மசோதா, 2020 ஆனது 2020 செப்.22 அன்று இந்திய மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா, கடந்த 1897ஆம் ஆண்டைய தொற்றுநோய்கள் சட்டத்தை திருத்துவ –தற்காக, ஏப்.22 அன்று இந்திய அரசு பிறப்பித்த ஓர் அவசர ஆணைக்கான நிரந்தர மாற்றாக உள்ளது. இதன்மூலம், COVID-19 தொற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் நலவாழ்வு ஊழியர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அனைத்து பிணையில் வெளிவரவியலாத குற்றமாக மாற்றப்படுவதோடு, அபராதம் மற்றும் 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் குற்றமாகவும் மாற்றப்படுகிறது.


**4.அண்மையில், பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, 2021-22 சந்தைப்படுத்துதல் பருவத்துக்கான ரபி பயிர்களுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அதிகரிக்க ஒப்புதல் அளித்தது. பின்வருவனவற்றில் எது ரபி பயிர் அல்ல?**

அ. கோதுமை

ஆ. சூரியகாந்தி

இ. கடுகு

ஈ. நிலக்கடலை ☑



❖ பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கன அமைச்சரவைக் குழு, 2021-22 சந்தைப்படுத்துதல் பருவத்துக்கான அனைத்து கட்டாய ரபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரைகளைச் சார்ந்து இந்தக் குறைந்தபட்ச ஆதரவு விலைகளின் அதிகரிப்பு உள்ளது.

❖ குறைந்தபட்ச ஆதரவு விலையில் அதிக அளவிலான ஏற்றம் பயறுக்கு (ஒரு குவிண்டாலுக்கு ₹300) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பருப்பு, இராப்சீட் மற்றும் கடுகு ஆகியவற்றுக்கு ஒரு குவிண்டாலுக்கு ₹225, குங்குமப்பூவுக்கு ஒரு குவிண்டாலுக்கு ₹112 MSP உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பார்லிக்கும், கோதுமைக்கும் முறையே ஒரு குவிண்டாலுக்கு ₹75, ₹50 உயர்த்தப்பட்டுள்ளது. பயிர் பன்முகத் தன்மையை ஊக்கப்படுத்துவதை இந்த வேறுபட்ட விலைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

**5.அண்மையில், 'நீடித்த மீட்பு' அறிக்கை என்ற சிறப்பு அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

**ஆ. பன்னாட்டு ஆற்றல் முகமை ☑**

இ. உலக நலவாழ்வு அமைப்பு

ஈ. உலக வங்கி

International Energy Agency
Secure Sustainable Together

❖ பன்னாட்டு ஆற்றல் முகமையானது (IEA) NITI ஆயோக் உடன் இணைந்து செப்.18 அன்று "நீடித்த மீட்பு" குறித்த சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டது. அது, ஆற்றல் அமைப்புகளை தூய்மையானதாகவும்,

நெகிழ்திறன்மிக்கதாகவும், நீடித்த எதிர்காலமுடையதாகவும் ஆக்கும் அதேவேளையில், பொருளாதார –ங்கள் புத்துயிர் பெறுவதற்கும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை முன்மொழிகிறது.

### 6.VAJRA ஆசிரியர் திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ. கல்வி அமைச்சகம்

**ஆ. அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சகம்

❖ அயல்நாடுகளில் வசிக்கும் இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு இந்திய நிறுவனங்கள் & பல்கலைகளில் பணிபுரிவதற்கு விரும்பத்தக்க வழிகள் மற்றும் வாய்ப்புகளை வழங்க இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் பின்வரும் திட்டங்களை வகுத்துள்ளது: –

1. Visiting Advanced Joint Research (VAJRA) Faculty திட்டம் – இது, அயல்நாட்டு அறிவியலாளர்க –ளையும் கல்வியாளர்களையும் இந்தியாவுக்கு அழைத்துவந்து, அவர்களை அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைகளில் பணியாற்றச் செய்யும் திட்டமாகும்.

2. இராமானுஜன் பெல்லோஷிப் – அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவம் ஆகிய அனைத்து துறைகளிலும் பணியாற்றுவதற்கு உயர்கல்வி நுண்ணறிவுகொண்ட இந்திய ஆராய்ச்சியாளர் –களுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது.

3. Biomedical Research Career Programme (BRCP) – இது, ஆராய்ச்சியாளர்களுக்கு, இந்தியாவில் மருத்துவம் (அ) பொதுநலத்தில் தங்கள் வாழ்வை மேற்கொள்ள வாய்ப்புகளை வழங்குகிறது.


### 7.இந்திய அரசானது நாட்டின் முதல் மருத்துவ சாதன பூங்காவை அமைக்கவுள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா



❖ நாட்டின் முதல் மருத்துவ கருவிகள் தயாரிப்பு நிறுவனங்கள் கேரளத்தில் அமையவுள்ளன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆதரவு, சோதனை மற்றும் மதிப்பீடு போன்ற மருத்துவ சாதனத் தொழிலுக்கு முழு அளவிலான சேவைகளை வழங்க, அதிமுக்கியத்துவம் வாய்ந்த மருத்துவ சாதனங்கள் துறையில் கவனம் செலுத்தப்படுகிறது.

❖ 'MedSpark' என்ற மருத்துவ சாதனங்கள் உற்பத்தி மையம், மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப துறையின் தன்னாட்சி நிறுவனமான ஸ்ரீ சித்திரைத்திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழினுட்ப மையம் (SCTIMST) மற்றும் கேரள மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் கூட்டு முயற்சியில் திருவனந்தபுரத்தின் தொன்னக்கல்லில் உள்ள வாழ்க்கை அறிவியல் பூங்காவில் நிறுவப்படவுள்ளது.

**8.உலக இருதய நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. செப்டம்பர் 26

ஆ. செப்டம்பர் 27

இ. செப்டம்பர் 28

**ஈ. செப்டம்பர் 29 ☑**

❖ மனிதனின் இருதயநலத்தை பாதிக்கும் 4 முக்கிய காரணிகளான புகையிலை பயன்பாடு, முறையற்ற உணவுப்பழக்கம், உடற்பயிற்சி செய்யாமை மற்றும் மது அருந்துதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் செப்.29 அன்று உலக இருதய நாள் அனுசரிக்கப்படுகிறது. "Use Heart to Beat Cardiovascular Disease" என்பது நடப்பாண்டு (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**9.இரும்புத்தாது சுரங்கத்திற்கு பெயர்பெற்ற தோனிமலை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. கர்நாடகா ☑**

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ இரும்புத்தாது சுரங்கத்திற்கு பெயர்பெற்ற தோனிமலை, கர்நாடக மாநிலத்தின் பெல்லாரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. வளம்மிகுந்த இந்த இரும்புத்தாது சுரங்கம், 50 ஆண்டுகளாக அரசுக்கு சொந்தமான NMDC'இன்கீழ் இயங்கிவந்தது. NMDC'இன் குத்தகை, 2018'இல் முடிவடைந்தது; அதன்பின்னர், அங்கு சுரங்கப்பணி நிறுத்தப்பட்டது. அண்மையில், கர்நாடக மாநில அரசு, தோனிமலையில் மீண்டும் சுரங்கப் பணியைத் தொடங்க முடிவுசெய்துள்ளது.

**10.ஆயுஷ்மான் பாரத் – பிரதமர் ஜன் ஆரோக்கியா யோஜனாவை (AB–PMJAY) அமல்படுத்துவதற்காக இந்திய அரசு நியமித்துள்ள அமைப்பு எது?**

**அ. தேசிய நலவாழ்வு ஆணையம் ☑**

ஆ. தேசிய நலவாழ்வுக் குழுமம்

இ. இந்தியா நலவாழ்வு மற்றும் பராமரிப்புக் குழுமம்

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

❖ ஆயுஷ்மான் பாரத்–பிரதமர் ஜன் ஆரோக்கியா யோஜனா என்பது ஏழைக்குடும்பங்களுக்கு நலவாழ்வுச் சேவையை வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட திட்டமாகும். கொள்கைகளை உருவாக்குதல், செயல்படுத்தும் வழிமுறைகள், AB–PMJAY'ஐ திறம்பட செயல்படுத்த அனைத்து மாநில அரசுகளுடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்காக, 1860ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் 'தேசிய நலவாழ்வு முகமை' என்ற தன்னாட்சி நிறுவனத்தை அரசு அமைக்கிறது. பின்னர், ஆயுஷ்மான் பாரத்–பிரதமர் ஜன் ஆரோக்கியா யோஜனாவை செயல்படுத்தும் பொறுப்புள்ள ஓர் அமைப்பாக, இது, 'தேசிய நலவாழ்வு ஆணையம்' என்று மாற்றப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2020'ஐ இந்திய மக்களவை நிறைவேற்றியது. அசல் நிறுவனங்கள் (ஒழுங்காற்றுதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**



அ. 2005

ஆ. 2008

**இ. 2013 ☑**

ஈ. 2017

❖ நிறுவனங்கள் சட்டம், 2013 ஆனது மத்திய பெருநிறுவன விவகார அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2020'ஆல் திருத்தப்பட்டுள்ளது. இந்த மசோதா நிறுவனத்தின் சட்ட ரீதியிலான குற்றங்களை மறுபரிசீலனை செய்கிறது. மேலும், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் அமர்வுகளை நிறுவுவதற்கும் இம்மசோதா முற்படுகிறது. இந்த அமர்வுகள், பொதுவாக புது தில்லியில் அல்லது அறிவிக்கப்படக்கூடிய வேறு இடங்களில் அமைந்திருக்கும்.

**2.வங்கிகளின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்த முற்படும் மற்றும் வங்கிகளின் உரிமம், நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் போன்ற பல்வேறு அம்சங்களைப் பற்றிய விவரங்களை வழங்கும் வங்கி ஒழுங்காற்றுதல் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?**




**அ. 1949 ☑**

ஆ. 1953

இ. 1956

ஈ. 1967

❖ கடந்த 1949ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வங்கி ஒழுங்காற்றுதல் சட்டமானது அண்மைய 2020ஆம் ஆண்டு வங்கி ஒழுங்காற்றுதல் (திருத்த) மசோதாவால் திருத்தப்பட்டது. இத்திருத்தம், ஒரு வங்கியை ஒன்றிணைத்தல் அல்லது சீரமைப்பதற்கான ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கிக்கு (RBI) அனுமதியளிக்கிறது. இது கூட்டுறவு வங்கிகளையும் RBI'இன்கீழ் கொண்டுவருகிறது.

**3.வேளாண் எந்திரமயமாக்கலில் புத்தாக்கங்களை ஊக்கப்படுத்துவதற்காக, தேசிய வேளாண்மை உயர் கல்வித்திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் தொடங்கிய ஹேக்கத்தானின் பெயரென்ன?**




அ. பிரதிக்யா

**ஆ. கிரிதக்யா ☑**

இ. சம்யுக்யா

ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

❖ பெண்களுக்கு உதவியாக இருக்கும் உபகரணங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, வேளாண் எந்திரமயமாக்கலை மேம்படுத்துவதற்கு சாத்தியமான தொழில்நுட்ப தீர்வுகளை மேம்படுத்துவதற்காக,

"கிரிதக்யா" என்ற பெயரில் வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு போட்டிக்கு தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

**4. "அறிவுசார் சொத்துரிமை குறித்த விழிப்புணர்வைக் கட்டமைத்தல்" என்ற திட்டத்தை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

அ. குறு, சிறு & நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ☑

ஆ. வீட்டுவசதி & நகரப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

இ. சட்டம் & நீதித்துறை அமைச்சகம்

ஈ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

❖ நிதியுதவி பெறுவதற்காக MSME'களால் IPR பதிவு செய்துகொள்ளப்படுதலை ஊக்குவிக்கும் பொருட்டு, "அறிவுசார் சொத்துரிமை குறித்த விழிப்புணர்வைக் கட்டமைத்தல்" (IPR) என்ற திட்டத்தை மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் (MSME) செயல்படுத்துகிறது.

**5.தொழிலாளர் தொடர்பான இரண்டாவது தேசிய ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?**

அ. 2002 ☑

ஆ. 2006

இ. 2010

ஈ. 2016



❖ தொழிலாளர் தொடர்பான இரண்டாவது தேசிய ஆணையமானது கடந்த 2002'இல் அமைக்கப்பட்டது. ஊதியம் வழங்குதல், நலத்திட்ட வசதிகள், சமூகப் பாதுகாப்பு போன்ற சூழ்நிலைகளுக்கு குறைந்த கடுமையான விதிமுறைகளைக்கொண்ட சிறிய அளவிலான அலகுகளுக்கு ஒரு தனிச்சட்டத்தை இந்த ஆணையம் பரிந்துரைத்தது.

**6.அதிக எண்ணிக்கையிலான செவிலியர் கல்லூரிகளைக் கொண்ட இந்திய மாநிலம் எது?**

அ. கர்நாடகா ☑

ஆ. கேரளம்

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஹிமாச்சல பிரதேசம்



❖ நாட்டில் அதிக எண்ணிக்கையிலான செவிலியர் கல்லூரிகளை கர்நாடக மாநிலம் கொண்டுள்ளது. மொத்தம் 314 கல்லூரிகளை அம்மாநிலம் கொண்டுள்ளது. அவற்றுள் 13 அரசு கல்லூரிகளும் 301 தனியார் கல்லூரிகளும் ஆகும். உடல்நலம் என்பது மாநிலப் பட்டியலின் கீழ் உள்ள ஒரு துறையாகும்; எனவே புதிய செவிலியர் கல்லூரிகளைத் திறப்பது என்பது அந்தந்த மாநில அரசுகளின்கீழ் உள்ளது.

**7.கீழ்க்காணும் எந்த இரு இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை ஷிங்குன் லா சுரங்கப்பாதை இணைக்கிறது?**

அ. லடாக் & ஜம்மு-காஷ்மீர்

**ஆ. லடாக் & ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. ஹிமாச்சல பிரதேசம் & உத்தரகண்ட்

ஈ. சிக்கிம் & உத்தரகண்ட்



- ❖ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (NHIDCL) உலகின் மிகநீளமான உயரமான ஷிங்குன் லா சுரங்கப்பாதை (13.5 கிமீ) பணியை விரைவுபடுத்தியுள்ளது. இந்தச் சுரங்கப்பாதையுடன் இணையும் லடாக் யூனியன் பிரதேசம் மற்றும் ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் லஹால்–ஸ்பிட்டி மாவட்டச்சாலை பணியும் வேகமாக நடைபெறுகிறது. இச்சுரங்கப்பாதை பணி நிறைவடையும்போது, மணாலி–கார்கில் நெடுஞ்சாலை ஆண்டு முழுவதும் போக்குவரத்துக்கு திறந்திருக்கும்.

**8.அண்மையில், பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, இராஷ்டிரிய உச்சதார் சிக்ஷா அபியானுக்கான இடைக்கால நீட்டிப்புக்கு ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?**

அ. 2010

**ஆ. 2013 ☑**

இ. 2015

ஈ. 2017

- ❖ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, நடுவணரசின் நிதியுதவிபெற்ற இராஷ்டிரிய உச்சதார் சிக்ஷா அபியானின் 2ஆம் கட்ட திட்டத்திற்கு 2017 ஏப்ரல்.1 முதல் 2020 மார்ச்.31 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு ஒப்புதல் அளித்தது. கடந்த 2013ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

**9.அண்மையில், நிலம் கிடைப்பு குறித்த நிகழ்நேர தகவலை வழங்குவதற்காக, 6 மாநிலங்களின் புவிக் கோளத் தகவல் அமைப்புடன் (GIS) எந்த வலைத்தளத்தை இந்திய அரசு ஒருங்கிணைத்துள்ளது?**

**அ. தொழிற்துறை தகவல் அமைப்பு ☑**

ஆ. வேளாண் தகவல் அமைப்பு

இ. நிலம் & வருவாய் தகவல் அமைப்பு

ஈ. மேற்கண்ட அனைத்தும்

- ❖ உலகில் எங்கிருந்தும் முதலீட்டாளர்களுக்கு நிகழ்நேர அடிப்படையில் நிலம் கிடைப்பு தகவல்களையும் புதுப்பித்தல்களையும் வழங்குவதற்காக, இந்திய அரசு, 6 மாநிலங்களின் புவிக்கோளத் தகவல் அமைப்பு (GIS)'உடன் தொழிற்துறை தகவலமைப்பு (IIS) தளத்தை ஒருங்கிணைத்துள்ளது.
- ❖ தொழிற்துறை தகவலமைப்பு தளம் என்பது நாடு முழுவதுமுள்ள தொழிலக பகுதிகள் / தொகுதிகளின் GIS வசதிகொண்ட தரவுத்தளமாகும்.

**10.அண்மையில், ஜம்மு–காஷ்மீர் அலுவல்பூர்வ மொழிகள் மசோதா, 2020'ஐ இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியது. ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள அலுவல்பூர்வ மொழிகளின் பட்டியலில், பின்வரும் மொழிகளுள் எ(து)வை சேர்க்கப்பட்டுள்ள(து)ன?**



அ. கஷ்மீரி

ஆ. ஹிந்தி

இ. டோக்ரி

ஈ. மேற்கண்ட அனைத்தும் ☑

❖ ஜம்மு–காஷ்மீர் அலுவல்பூர்வ மொழிகள் மசோதா 2020'ஐ இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியது. அது கஷ்மீரி, டோக்ரி மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளை யூனியன் பிரதேசமான ஜம்மு–காஷ்மீரில், ஏற்கனவே அலுவல்பூர்வ மொழிகளாக உள்ள உருது & ஆங்கிலத்திற்கு கூடுதலாக சேர்க்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ மின்சார போக்குவரவுக்கு ஒரு மிகப்பெரிய உந்துதலை அளிக்கும் விதமாக, FAME இந்தியா திட்டத்தின் 2ஆம் கட்டத்தின்கீழ் மகாராட்டிரா, கோவா, குஜராத் மற்றும் சண்டிகரில் 670 மின்சார பேருந்துகளுக்கும், தமிழ்நாடு, மபிரதேசம், கேரளா, குஜராத் மற்றும் போர்ட் பிளேரில் 241 மின்னேற்ற நிலையங்களுக்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், தமிழ்நாட்டில் உள்ள திருச்சிராப்பள்ளியில் 25 மின்னேற்ற நிலையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

---